FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)"

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8129877

1. District : Thoothukudi — PS: Vigilance and Anti-Corruption Thoothukudi — Year: 2025 — FIR No.: 08/2025 — Date: 12.08.2025
   மாவட்டம் — காவல்நிலையம் — ஆண்டு — மு.த.அ. எண் — நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 — Sections பிரிவுகள்: 7and 12
   (ii) Act சட்டம்: B.N.S.S — Sections பிரிவுகள்: r/w 106
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : — Date from : நாள் முதல் — Date to : நாள் வரை --
   குற்ற நிகழ்வு நாள்
   Time Period : On 11.08.2025 Before 13.30 hrs — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
   நேர அளவு
   (b) Information Received at PS. Date : 12.08.2025 — Time : நேரம் 11.15 hrs
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
   (c) General Diary Reference : Entry No(s) 12.08.2025 — Time : 11.30 hrs
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — நேரம்

4. Type of Information : Written/ Oral : Written
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Regional Transport Office, Thoothukudi. 4 Kms North East
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : மாவட்டம்
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்

6. Complainant /Informant (a) Name : Tr.S.Pandiarajan — (b) Father's/ Husband's Name : Tr.K.Samuthiram
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth 40/2025 — (d) Nationality : Indian — (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு — நாட்டினம் — வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : Special Thasildar (Land Acquisition) — (g) Address : National Highways Unit-2, Thoothukudi-1, Thoothukudi District.
   தொழில் — முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   (1.) Tr.A.K.Murugan, aged 55/2025, S/o Tr.A.Karthikeyan, Regional Transport Officer, Thoothukudi, Thoothukudi District and 7 others.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: NIL
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

--

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு --

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் --

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

-- Separate Sheet Enclosed --

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed V.Annalakshmi Inspector of Police Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

12/8/25

12.8.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

12.08.2025 at 12.30 hrs

S. PETER PAUL DURAI
Name: பெயர் .....
Rank: நிலை ..... No. எண் .....
Deputy Superintendent of Police
Vigilance And Anti Corruption
Thoothukkudi District
Thoothukkudi

Attachment to Column No.12 of First Information Report in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.08/2025

பணிந்தனுப்பப்படுகிறது :-

1. Tr.A.K.Murugan, aged 55/2025,
   S/o Tr.A.Karthikeyan,
   Regional Transport Officer,
   Thoothukudi, Thoothukudi District.

Private Individuals :

2. Tr.P.Kannan @ Krishnamoorthi,
   aged 59/2025,
   S/o Tr.Ponnusamy,
   2/307, Mela Theru,
   Korampallam, Thoothukudi District.

3. Tr.T.Rajadurai Ponkumar,
   aged 58/2025,
   S/o Tr.Thangamani,
   No.93I/8B, 7th Street,
   Ashok Nagar, Thoothukudi-8.

4. Tr.P.S.Kannan, aged 57/2025,
   S/o Tr.Packianathan,
   No.46, Pathirakaliamman Kovil Street,
   Thoothukudi-2.

5. Tr.C.Sridhar, aged 53/2025,
   S/o Tr.Chinnasamy,
   No.4/191/3, KTC Nagar,
   Ettayapuram Road,
   Thoothukudi-2.

6. Tr.V.Sahayaraj, aged 55/2025,
   S/o Tr.Viyahappan,
   No.12C/9, 5th Street,
   Sundaravelpuram,
   Thoothukudi.

7. Tmt.G.Seethalakshmi, aged 50/2025,
   W/o Tr.A.Gopalakrishnan,
   No.102G/35A, 7th Street,
   Kurinji Nagar, Thoothukudi.

8. Tr.A.Bharathi Raju, aged 63/2025,
   S/o Tr.Arunachalam,
   No.4/24,
   Athi Barasakthi Nagar 1st Street,
   Thoothukudi.

தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் அலுவலக பணியாளர்கள் மேற்படி வட்டார போக்குவரத்து அலுவலக பகுதிக்கு உட்பட்ட பகுதியில் இருந்து அங்கு வரும் பொதுமக்களிடம் புதிய வாகன பதிவு, வாகனப் பதிவு புதிப்பித்தல், தகுதிச்சான்று வழங்குதல், வாகன உரிமம் வழங்குதல், வாகன உரிமம் புதுப்பித்தல் போன்ற அன்றாட பணிகளை மேற்கொள்வதற்கு இடைத்தரகர்கள் மூலமாகவும் நேரிடையாகவும் லஞ்சம் பெற்று வருவதாக கிடைத்த ரகசிய தகவலின்பேரில் 11.08.2025-ம் தேதி மதியம் 13.30 மணி முதல் இரவு 19.45 மணி வரை துணை ஆய்வுக் குழு அலுவலர் நிலையில் S.பாண்டியராஜன், தனி வட்டாட்சியர் (நி.எ.), தேசிய நெடுஞ்சாலை அலகு-2, தூத்துக்குடி-1, தூத்துக்குடி மாவட்டம் அவர்களுடன் தூத்துக்குடி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் திரு.S.பாண்டியராஜன் அவர்கள்

கொடுத்த புகார் மனுவை 12.08.2024-ம் தேதி நான் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலக பணியில் இருந்தபோது காலை 11.15 மணிக்கு பெற்று தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 08/2025, பிரிவு 7 and 12 of PC Act 1988 as Amended in 2018 r/w 106 B.N.S.S –ன் படி மார்ஜினில் கண்ட எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் : திரு.S.பாண்டியராஜன், தனி வட்டாட்சியர் (நி.எ.), தேசிய நெடுஞ்சாலை அலகு-2, தூத்துக்குடி-1, தூத்துக்குடி மாவட்டம். பெறுநர் : காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு. அய்யா, பொருள் : திடீர் தணிக்கை செயல்முறைகள் - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது தொடர்பாக. ****** தூத்துக்குடி மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தின் பின்புறம் அமைந்துள்ள தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலகத்தை எனது தலைமையில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணை கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் திருமதி.ஜே.அனிதா மற்றும் போலீஸ் பார்ட்டி உதவியுடன் 11.08.2025-ம் தேதி மதியம் 13.10 முதல் 13.30 மணி வரை கண்காணித்ததில் தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் அலுவலக பணியாளர்கள் மேற்படி வட்டார போக்குவரத்து அலுவலக பகுதிக்கு உட்பட்ட பகுதியில் இருந்து அங்கு வரும் பொதுமக்களிடம் புதிய வாகன பதிவு, வாகனப் பதிவு புதிப்பித்தல், தகுதிச்சான்று வழங்குதல், வாகன உரிமம் வழங்குதல், வாகன உரிமம் புதுப்பித்தல் போன்ற அன்றாட பணிகளை மேற்கொள்வதற்கு இடைத்தரகர்கள் மூலமாகவும் நேரிடையாகவும் லஞ்சம் பெற்று வருவதற்கான முகாந்திரம் தெரிய வந்ததால் 11.08.2025-ம் தேதி மதியம் 13.30 மணி முதல் இரவு 19.45 மணி வரை மேற்படி அலுவலகத்தை தணிக்கை செய்யப்பட்டது. மேற்படி தணிக்கையின் போது வட்டார போக்குவரத்து அலுவலகத்தினுள் அமைந்துள்ள சிறிய கூட்ட அறையினுள் ஆவணங்களுக்கு இடையில் பணம் ரூ.30,000/- மறைத்து வைக்கப்பட்ட நிலையில் இருந்தது. அந்த பணம் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.ஆ.கா.முருகன் அவர்கள் முன்னிலையில் அந்த சிறிய கூட்ட அறையினை சோதனை செய்த போது கண்டெடுக்கப்பட்டது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்க அந்த பணத்திற்கு அவரால் உரிய விளக்கம் அளிக்க இயலவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.30,000/- சந்தேகத்திற்கிடமான

வகையில் காணப்பட்டதாலும் பொதுமக்களிடம் லஞ்சமாக பெற்ற பணத்தை அலுவலக பணியாளர்கள் அங்கு மறைத்து வைத்திருக்கலாம் என்ற காரணத்தினாலும் வழக்கு விசாரணைக்காக மேற்படி பணம் **ரூ.30,000/-** செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. பின்னர் திடீர் தணிக்கையின் போது வட்டார போக்குவரத்து அலுவலக வளாகத்தில் நின்று கொண்டிருந்த இம்மானுவேல் கன்சல்டிங் கம்பெனி வாகனங்கள் சம்பந்தமாக வட்டார போக்குவரத்து பணிகளை கவனித்து வரும் திரு.பொ.கண்ணன் என்பவரை சோதனை செய்த போது அவரின் சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.3,000/- குறித்து உரிய விளக்கம் அளிக்காததினால் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி மேற்படி பணம் **ரூ.3,000/-** ம், அவர் ஆஜர் செய்த மனு அதன் இணைப்புகளுடன் விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. அதற்கு அடுத்து அலுவலக வளாகத்தில் நின்று கொண்டிருந்த ஸ்டார் மினி பஸ் உரிமையாளர் திரு.ராஜதுரை பொன்குமார் என்பவரை சோதனை செய்த போது அவரின் சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.4,300/- குறித்து உரிய விளக்கம் அளிக்காததினால் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி மேற்படி பணம் **ரூ.4,300/-** விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. அதற்கு அடுத்து அலுவலக வளாகத்தில் நின்று கொண்டிருந்த ஆட்டோ கன்சல்டிங் தொழில் செய்து வரும் திரு.பா.சோ.கண்ணன் என்பவரை சோதனை செய்த போது அவரது சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.26,000/- குறித்து உரிய விளக்கம் அளிக்காததினால் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி மேற்படி பணம் **ரூ.26,000/-** விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. அதற்கு அடுத்து அலுவலக வளாகத்தில் நின்று கொண்டிருந்த ஆட்டோ கன்சல்டிங் தொழில் செய்து வரும் திரு.சி.ஸ்ரீதர் என்பவரை சோதனை செய்த போது அவரது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.10,500/- குறித்து உரிய விளக்கம் அளிக்காததினால் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி மேற்படி பணம் **ரூ.10,500/-** விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. அதற்கு அடுத்து அலுவலக வளாகத்தில் நின்று கொண்டிருந்த நெப்டியூன் கம்பெனி வாகனங்கள் சம்பந்தமாக வட்டார போக்குவரத்து அலுவலக பணிகளை செய்து வரும்

திரு.வி.சகாயராஜ் என்பவரை சோதனை செய்த போது அவரது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.1,700/- வைத்திருந்தார். மேலும் அவரது TN 69 AD 7799 இருசக்கர வாகனத்தின் பெட்டியில் வட்டார போக்குவரத்து அலுவலகம் சம்பந்தப்பட்ட ஆவணங்களுக்கு இடையில் ரூ.8,000/- காணப்பட்டது. மேற்படி பணங்கள் குறித்து அவரிடம் கேட்ட போது உரிய விளக்கம் அளிக்காததினாலும், அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி மேற்படி பணம் (ரூ.1,700/- + ரூ.8,000/-=) **ரூ.9,700/-** விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. அதற்கு அடுத்து அலுவலக வளாகத்தில் நின்று கொண்டிருந்த திருமதி.கோ.சீதாலெட்சுமி என்பவரை சோதனை செய்த போது அவரது மணிபர்சினுள் வைத்திருந்த பணம் ரூ.4,810/- குறித்து உரிய விளக்கம் அளிக்காததினால் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி மேற்படி பணம் **ரூ.4,810/-** விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. அதற்கு அடுத்து அலுவலக வளாகத்தில் நின்று கொண்டிருந்த திரு.அ.பாரதிராஜ் என்பவரை விசாரிக்க அவர் தனது வாடிக்கையாளர்களுக்குரிய வாகனங்களுக்கான வட்டார போக்குவரத்து அலுவலகம் சம்பந்தப்பட்ட பணிகளை செய்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்த போது அவரது சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.1,290/- குறித்து உரிய விளக்கம் அளிக்காததினால் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி மேற்படி பணம் **ரூ.1,290/-** விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. மேலும் அவருடைய TN 69 AL 0825 என்ற பதிவெண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தினை சோதனை செய்த போது அதனுள் வட்டார போக்குவரத்து அலுவலகம் சம்பந்தப்பட்ட ஆவணங்களுக்கு இடையில் காணப்பட்ட பணம் ரூ.62,500/- குறித்து உரிய விளக்கம் அளிக்காததினால் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி மேற்படி பணம் **ரூ.62,500/-** விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. மேலும் நான்கு சக்கர வாகனத்தில் காணப்பட்ட வட்டார போக்குவரத்து அலுவலகம் சம்பந்தப்பட்ட ஆவணங்களில் 2025ம் ஆண்டில் பெறப்பட்ட 7 வாகனங்களுக்குரிய National Permit-களின் நகல்கள் 1) RNo:- 1280/B1/2025, 2) RNO:- 2535/B1/2025, 3) RNO:- 18533/C1/2025, 4) RNO:- 215/B1/2025, 5) RNO:- 19585/B1/2025, 6) RNO:- 17029/B1/2025, 7) RNO:-

16889/B1/2025 மட்டும் அவரிடமிடருந்து விசாரணைக்காக பெறப்பட்டது. மேலும், அந்த ஆவணங்களுடன் தொகை விபரங்கள் எழுதப்பட்ட குறிப்புகளுடன் கூடிய 6 துண்டு பேப்பர்கள் காணப்பட்டது. அவை குறித்து திரு.அ.பாரதிராஜ் அவர்களிடம் கேட்க அவரால் சரியான விளக்கம் கூற இயலாததால் மேற்படி 6 துண்டு பேப்பர்களும் வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலக பணம் கையிருப்பு பதிவேடு செயல்முறைகள் மூலம் வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திடீர் தணிக்கையின் போது மேற்படி அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் மற்ற ஊழியர்களிடம் இருந்த பணம் குறித்து கேட்ட போது அவர்கள் அளித்த விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இருந்ததால் அந்த பணம் செயல்முறைகள் மூலம் அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் ஊழியர்கள் மற்றும் தனி நபர்களிடம் வாக்குமூலங்கள் என் முன்னிலையில் பெறப்பட்டது. மேலும் இந்த செயல்முறையில் கைப்பற்றப்பட்ட மேற்படி பணம் மற்றும் ஆவணங்கள் தங்களிடம் உரியவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டு ஒப்படைக்கிறேன். Sd/- 12.08.2025, திரு.S.பாண்டியராஜன், தனி வட்டாட்சியர் (நி.எ.), தேசிய நெடுஞ்சாலை அலகு-2, தூத்துக்குடி-1, தூத்துக்குடி மாவட்டம். Sir, Received the complaint on today (12.08.2025) at 11.15 hrs and registering the complaint as Thoothukudi V&AC Cr.No.08/2025, U/s 7 and 12 of PC Act, 1988 as Amended in 2018 r/w 106 B.N.S.S Sd/- 12.08.2025, S.Peter Paul Durai, Deputy Supdt. of Police, V&AC, Thoothukudi Detachment. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, திரு.S.பாண்டியராஜன் அவர்களின் அசல் புகார் மனு மற்றும் தூத்துக்குடி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் வைத்து தயார் செய்த செயல்முறைகள் ஆகியவற்றை இணைத்து மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு விசாரணைக்காக திருமதி.V.அன்னலெட்சுமி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு அவர்களிடம் ஒப்படைக்கிறேன்.

12.8.2025

Deputy Superintendent of Police
Vigilance And Anti Corruption
Thoothukkudi District
Thoothukkudi